
For Private circulation only

# ரேமா
## செய்திமடல்

மலர் 12 ஜனவரி - மார்ச்' 2020 இதழ் 1 - 3




T8/510, Sagar Lake View Homes, Ayodhya Bye Pass Road, Piplani Post, Bhopal (M.P.) - 462022
Contact Nos: 09893141410, 09840517559,Website www.dhayaministries.org

# ஆசிரியர் கடிதம்...............



**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாறாத**

**இணையற்ற இனிதான நாமத்தில்**

**உங்களுக்கு என் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

2020 ஆண்டு உங்கள் அனைவரையும் தேவன் ஆசீர்வதித்து உங்கள் எல்லைகளை விரிவாக்கும் ஆண்டாகும்....

உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில், குடும்ப வாழ்க்கையில், உங்கள் கையின் பிரசாசங்களில், வேலையில், பிள்ளைகள் காரியத்தில், ஊழியங்களில் உங்கள் எல்லைகள் பெரிதாகும்படி கர்த்தர் நிச்சயமாகவே உங்களை ஆசீர்வதிப்பார்.

கடந்த ஆண்டில் உங்கள் விலையேறப் பெற்ற ஜெபத்தினாலும் அர்ப்பணிப்போடு நீங்கள் அனுப்பிய காணிக்கையினாலும் ஊழியங்களின் தேவைகள் சந்திக்கப்பட்டது. உங்களுக்காக தொடர்ந்து ஜெபித்து வருகிறோம், எங்களுடைய ஊழிய பிரயாணத்தில் தேவனுடைய சமாதானம், சுகம், பாதுகாப்பு கிடைக்கவும், இந்த வருடத்தில் தேவன் தயா ஊழியங்களுக்காக வைத்திருக்கிற திட்டங்களை நிறைவேற்றவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த வருடத்தில் தேவன் உங்கள் எல்லைகளை விரிவாக்குவேன் என்று சொல்லியிருக்கிறார். வேதாகமத்தில் யாபேஸை பற்றி பார்ப்போம் என்றால் அவனுடைய தாய்: நான் துக்கத்தோடே அவனைப் பெற்றேன் என்று சொல்லி அவனுக்கு யாபேஸ் என்று பேரிட்டாள். ஆனால் அதே யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி தேவரீர் என்னை ஆசீர்வதித்து என் எல்லையை பெரிதாக்கும் என்று வேண்டிக் கொண்டான் அவன் **வேண்டிக் கொண்டதை தேவன் அவனுக்கு அருளினார்.**

நீங்கள் தேவனை நோக்கி விசுவாசத்துடன் வேண்டிக்கொள்ளும் போது, தேவன் உங்களை ஆசீர்வதித்து நீங்கள் வேண்டிக்கொள்கிறதை உங்களுக்கு அருளுவார். தேவன் உங்களுக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார்... **‘உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு’ - ஏசாயா 54:2**

நீங்கள் கேளுங்கள்... அப்பொழுது உங்களுடைய எல்லா எல்லைகளும் விசாலமாக்கப்படும்.

எலியா தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்ட ஒரு தீர்க்கதரிசி அவர் மூலமாக தேவன் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார். அவருக்குப் பிறகு தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்ற, கர்த்தர் எலிசாவைத் தெரிந்துக்கொண்டார். கர்த்தர் எலியாவை எடுத்துக் கொள்ளும் வேளை வந்த பொழுது எலியா எலிசாவை நோக்கி நான் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளபடுமுன்னே நான் உனக்கு செய்ய வேண்டியது என்ன, கேள் என்றான். அதற்கு எலிசா எலியாவை நோக்கி உம்மிடத்திலுள்ள **ஆவியின் வரம் எனக்கு இரட்டிபாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன்** என்றான் (II இராஜாக்கள் 2:9,10). **கர்த்தரும் அவர் வேண்டிக் கொண்டபடி ஆவியின் வரத்தை அருளினார்.**

ஆவிக்குரிய மற்றும் உலக ஆசீர்வாதங்களிலும் உங்கள் எல்லைகள் பெரிதாக தேவனிடத்தில் கேளுங்கள். இந்த வருடத்தில் தேவன் நிச்சயமாகவே உங்கள் வேண்டுதல்களை கேட்டு, ஆவிக்குரிய மற்றும் உலக வாழ்க்கையிலும் நீஙகள் ஆசீர்வாதமாக வாழும்படியாக உங்களை பெருகச் செய்வாராக!

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி

ஜோஸ்பின் டேனியல்



# ஒளி வீசுங்கள்........



சகோ. ஆல்ஃப்ரட் டேனியல்

அன்பான சகோதர, சகோதரிகளே! உங்களுக்குள் ஒளியிருந்தால் தான் ஒளி வீச முடியும். உங்களுக்குள் ஒளி வராத வரையிலும் நீங்கள் ஒளியை அறிய முடியாது. ஒளி இருளை நீக்குகிறது. ஒளி இல்லாத இடங்களில் தான் இருள் இருக்கும். ஒளி இருக்கிற இடங்களில் இருள் நீங்கிவிடும்.

இந்த ஆண்டில் தேவன் விரும்புகிறார்: நீங்கள் ஒளியாக மாறி, வெளிச்சம் வீச வேண்டுமென்று. ஒளியை போல மாறுவதற்கு முதலாவது ஒளி என்றால் என்ன? அதனுடைய பயன் என்ன? என்று அறிய வேண்டும். நம்முடைய வாழ்வில் அதனுடைய முக்கியம் என்ன? உலகம் எங்கும் பார்க்கையில் ஒளிதான் வெளிச்சத்தை தருகிறது. இருளை நீக்குவதற்குதான் ஒளியை உபயோகிக்கிறார்கள். இருளிலிருக்கிற பொருட்கள் நமக்கு தெரிய ஒளியை உபயோகிக்கிறார்கள்.

***ஒளி என்றால் என்ன*** என்று புரிந்து கொள்வதற்கு, அதனின் அருகில் வருவது அவசியம். ஒளியின் அருகில் வராத வரையிலும் அதனை பற்றி புரிந்துக்கொள்வது கடினம். நம்முடைய தேசத்தில் வாழ்கின்ற நமது பிரியமான சகோதர சகோதரிகள் தங்கள் பண்டிகையை மிகவும் ஆடம்பரமாக கொண்டாடுகிறார்கள். இனிப்பு பலகாரங்களை பிறருடன் பகிர்ந்து கொள்கிறார்கள், தன்னுடைய வீட்டை விளக்கினால் அழகாக அலங்கரிக்கிறார்கள். மாலையில் அல்லது இரவில் அவர்களுடைய வீட்டை பார்க்கும் போது விளக்கினால் அவர்களுடைய வீடு பிரகாசமாக தெரியும். அந்த காட்சி பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும், மனதிற்கு இன்பமாகவும் இருக்கும். அவர்களுடைய வீடு விளக்கினால் அலங்கரிக்கப்பட்டதினால் பிறருடைய வீட்டை பார்க்கிலும் மிகவும் ஒளியாகவும் அழகாகவும் தெரிகிறது. ஏன் அவர்களுடைய வீடு அழகாகவும், வெளிச்சமாகவும் தெரிகிறது? அதற்கு காரணம் அவர்கள் தங்கள் வீட்டை விளக்கினால் வெளிச்சமாக்கியிருக்கிறார்கள்.

***விளக்கு ஏன் வெளிச்சத்தை தருகிறது?*** எரிந்துக் கொண்டிருக்கிற மற்றும் வெளியிலே தெரிகிற திரியின் அடுத்த பாகம் அந்த விளக்கில் இருக்கின்ற எண்ணெயில் மூழ்கியிருக்கிறது. திரியை எரிய வைக்கும் போது திரியானது எரிகிறது. திரி எரிவதினால் விளக்கு வெளிச்சம் கொடுக்கிறது. விளக்கிற்குள் எண்ணெய் இருக்கும்வரையிலும் திரியானது எரிந்துக் கொண்டே இருக்கும். விளக்கிற்குள் எண்ணெய் முடிந்துவிட்டால் திரியானது எரிவது நின்று விடும். மீண்டும் விளக்கில் எண்ணெய் ஊற்றும் போது விளக்கானது தொடர்ந்து எரிந்துக்கொண்டே இருக்கும். விளக்கை எரிய வைப்பதற்கு மூலக்காரணம் எண்ணெய். தூரத்திலிருந்து அதை பார்ப்பது எளிதல்ல. விளக்கானது ஒளியை வீசுகிறது. அந்த ஒளியானது இருளை நீக்கி பிறர்களை அதற்கு நேராக இழுக்கிறது. அது நம்மை உணர்த்துகிறது அதன் மூலமாக தான் வெளிச்சம் இருக்கிறது.

**வேதாகமம் கூறுகிறது:** ஒளியானது உலகத்திலே வந்திருந்தும், மனுஷர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை அதிகமாக விரும்பினார்கள் **(யோவான் 3:19)**. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வெளிச்சமாக வந்தார். எவர்களுடைய கிரியைகள் பொல்லாதவைகளாய் இருந்ததோ அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் ஒளியினிடத்தில் வந்தால் அவர்களுடைய கிரியைகள் வெளியரங்கமாகி அவர்கள் ஆக்கினை தீர்ப்புக்குட்படுவார்கள். இருளில் இருக்கிறவர்கள் வெளிச்சத்திற்கு வர வேண்டும் என்று வாழ்க்கைக்கு ஒளியாக இயேசு இந்த பூமிக்கு வந்தார். வெளிச்சம் இருளை நீக்குகிறது. இயேசு உங்களுக்குள் பிறந்திருக்கிறார் என்றால் உங்களில் வெளிச்சம் உதித்தது. இது உங்களில் காணப்படுகிற இருளை உங்களை விட்டு நீக்குகிறது. கர்த்தராகிய இயேசு உங்களை இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்தில் அழைத்திருக்கிறார் **(I பேதுரு 2:9)**. ஆகையால் நீங்கள் அவருடைய ஆச்சரியமான ஒளியினிடத்தில் வந்து அவருடைய ஒளியை பெற்று, இந்த பூமியில் வெளிச்சத்தை பிரகாசிக்க வேண்டும்.

திரியானது விளக்கின் எண்ணெயில் இருக்கும் வரையில் எரிந்துக் கொண்டே இருக்கிறது. அப்படியே உங்களில் இயேசு இருப்பார் என்றால் நீங்கள் வெளிச்சத்தை போல பிரகாசித்துக் கொண்டிருப்பீர்கள். உங்களில்

இயேசு இல்லையென்றால் வெளிச்சம் இராது. இருளில் வாழ்கிறவன் எங்கே செல்கிறான், என்ன செய்கிறான், என்ன நடக்கிறது என்று அறியாதிருக்கிறான். இருளானது அவனை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது, அதினால் அவன் விரும்புவதை செய்ய முடியவில்லை. அவன் விரும்புவதை செய்ய கூடாதிருக்கிறது. ஆனால் இருளானது அவனை செயல்படுத்துகிறது. அடிமை தன் விருப்பத்திற்கு ஏதும் செய்ய முடியாது. அவன் யாருக்கு அடிமையாக இருக்கிறானோ அவனுடைய கட்டளைக்குதான் கீழபடிவான். இருளானது ஆளுகை செய்யும் வரையிலும் இருளின் கிரியைகள் தான் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். தன் வாழ்க்கையிலிருந்து இருளை நீக்குவதற்கு வெளிச்சத்திற்கு இடத்தை கொடுப்பது அவசியம். வெளிச்சத்திற்கு முழு வாழ்க்கையிலும் இடம் கொடுக்காவிட்டால் கீழ்படியாதவர்களிடத்தில் கிரியை செய்கிற ஆகாயத்தின் அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துக்கொண்டு, மாம்சமும் மனசும் விரும்பினதை செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். மனிதர்களை சிருஷ்டித்த பரம தகப்பன் அவர்களை நேசித்து, இருளின் அடிமைதனத்திலிருந்து மனிதர்கள் விடுதலையாக வேண்டுமென்றும் விரும்புகிறார். ஆகையால் மனிதனை இருளின் ஆதிகத்திலிருந்து விடுதலையாக்கி தன் நேசக்குமாரனுடைய ராஜ்யத்தில் உட்படுத்தினார். இதனால் மனிதன் பாவமன்னிப்பாகிய மீட்பைப் பெற்றான் (கொலோ 1:13.14). இதுவரையிலும் நீங்கள் ஒளியான இயேசுவை விசுவாசிக்கவில்லையென்றால் அவரை விசுவாசித்து தன் வாயினால் இயேசுவே கர்த்தர் என்று அறிக்கை செய்து, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உங்கள் இருதயத்தில் விசுவாசியுங்கள், அப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். இரட்சிப்பு என்றால் விடுதலை, மீட்பு. நீங்கள் இருளிலிருந்து முழுமையாக விடுதலை, மீட்பு பெற வேண்டுமென்று விரும்பினால் உங்கள் முழு வாழ்க்கையை ஒளியான இயேசுவின் கரத்தில் ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது தான் அந்தகாரத்தின் அடிமைதனத்திலிருந்து விடுதலை கிடைக்கும் (யோவான் 8:12).

***முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள் அப்பொழுது விபச்சாரம், பொருளாசை, அசுத்தம், வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் விக்கிரகாராதனை போன்ற கிரியைகள் நடைப்பெற்றன. ஆனால் இப்பொழுதோ நீங்கள் கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துக் கொள்ளுங்கள். ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும் (எபே 5:8.9).***

நீங்கள் ஒளியின் பிள்ளைகளாய் மாறினதினால் உங்களுடைய வாழ்க்கையின் மூலமாக பிறருக்கு நற்குணம் வெளிப்பட வேண்டும். தேவன் உங்களை கிறிஸ்து இயேசுவின் மூலமாக அழைத்ததின் நோக்கம் உங்கள் மூலமாக நற்குணம் வெளிப்பட வேண்டுமென்று. அதனை புரிந்து நீங்கள் செயல்பட வேண்டும். அதினால் உங்களை அழைத்த தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும்.

விளக்கை தூரத்திலிருந்து பார்க்கும் போது வெளிச்சம் தெரியும் ஆனால் அதற்குள் இருக்கிற எண்ணெய் தெரிவதில்லை. அது போல உங்களை காண்கிறவர்கள் உங்களில் வெளிச்சத்தின் பிரகாசத்தை பார்க்கிறார்கள். ஆனால் உங்களுக்குள் இருக்கிற ஒளியான இயேசுவை பார்ப்பதில்லை. ஆனால் உங்களுடைய நடக்கையினால் அவருடைய வெளிச்சத்தை பெறுவார்கள். உங்களுடைய ஒளியின் மூலமாக இருளில் இருக்கிறவர்கள் ஆச்சரியமான ஒளியான இயேசுவினிடத்தில் அழைத்து வருவதை தேவன் விரும்புகிறார். ஏனெனில் அவர்கள் இருளின் அடிமைதனத்திலிருந்து விடுதலை பெற வேண்டும்.

***இயேசு கூறினார்: நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள், மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்காது (மத் 5:16).*** கர்த்தராகிய தேவன் உங்களை வெளிச்சமாக மாற்றி பிரகாசிக்க வைத்திருக்கிறார். உங்களுடைய பிரகாசம் மறைந்திராமல் ஒளி வீச வேண்டும். அவர் உங்களை உயரமான ஸ்தலத்தில் நிறுத்தப் போகிறார். அது உங்களுடைய மனதில் தோன்றினதுமில்லை, உங்களுடைய எண்ணத்தில் வெளிப்பட்டதுமில்லை. அவருக்கு கீழ்ப்படிந்து முழு வாழ்க்கையை ஒளியாகிய இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தவர்களுக்கு பரம பிதா மிக சீக்கிரத்தில் தன்னுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார். தீர்க்கதரிசி கூறியிருக்கிறார்: ***“இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும். ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார். அவருடைய மகிமை உன்மேல் காணப்படும். உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்திற்கு ராஜாக்களும் நடந்துவருவார்கள்” (ஏசா 60:2,3).***
அன்பானவர்களே! உங்களுடைய கீழ்படிதலினால் தேவன் உங்களுடைய ஸ்தானத்தை அதிகமாக உயர்த்த

போகிறார் என்று நீங்கள் அறியாதிருக்கிறீர்கள். உங்களுடைய வெளிச்சத்திற்கு நேராக ஜாதி, ஜாதிகள் கடந்து வருவார்கள். ஜாதி ஜாதி மக்கள் மாத்திரமல்ல ராஜாக்களும், ஆளுகைச்செய்கிற பிரபுக்களும் உங்களுக்கு நேராக கடந்து வருகிற காலமாயிற்று. ஆகையால் நீங்கள் தேவனுடைய ஒளியை போல பிரகாசித்துக் கொண்டேயிருங்கள்.

**இயேசு தொடர்ந்து கூறுகிறார்: விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும் (5:15).** இன்றைக்கு விளக்கு கொளுத்துகிற சூழ்நிலை இல்லை. இப்பொழுது உள்ள பிள்ளைகள் விளக்கை குறித்து அறிந்ததுமில்லை. அதனுடைய மகத்துவத்தை புரிந்ததுமில்லை. மின்சாரம், பல்பு, டியூப் லைட், மெழுகுவர்த்தி, வருவதற்கு முன்பு விளக்கை உபயோகித்துக் கொண்டிருந்தார்கள். விளக்கு வெளிச்சத்தை தருவதற்காகவே விளக்கை உபயோகித்தார்கள். விளக்கை எரிய வைத்து ஒருவரும் மரக்காலால் மூட மாட்டார்கள். மரக்காலினால் மூடினால், வீட்டிலுள்ளவர்களுக்கு வெளிச்சம் தராது. வீட்டிற்கு வெளிச்சம் தருவதற்காகவே விளக்கை கொளுத்தி தண்டின் மேல் வைப்பார்கள், அதினால் வீட்டிலுள்ள அனைவருக்கும் வெளிச்சம் கிடைக்கும். அப்படியே நீங்கள் வெளிச்சத்தை பெற்று அதை மூடி வைத்தால் அதனால் ஒருவருக்கும் பிரயோஜனம் அல்ல. அவர்களுடைய கிரியை பிறர்களுக்கு முன்பாக வெளிப்படும். அப்பொழுது உங்களுடைய ஒளியின் கிரியைகளை கண்டு, பிறர்கள் ஒளியான கர்த்தரிடத்தில் கடந்து வருவார்கள். உங்களுடைய வாழ்க்கை வீட்டில் வாழ்கிற அனைவருக்கும் ஒளியாக கிரியை செய்யவேண்டும். அப்பொழுது குடும்பத்தின் அங்கத்தினர்கள் உங்களுடைய ஒளியை கண்டு கர்த்தராகிய தேவனுடைய ஆச்சரியமான ஒளியினிடத்தில் கடந்து வருவார்கள். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத் 5:16). எப்படி இயேசு நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தாரோ அப்படியே உங்களுடைய வாழ்க்கையும் நன்மை செய்கிறதாய் இருக்க வேண்டும், ஏனெனில் வெளிச்சத்தின் கிரியைகள் சகல விதமான நற்கிரியைகள்: அவைகள் உங்கள் மூலமாக வெளிப்பட வேண்டும்.

ஒளியின் கிரியைகள் நீதியாகும். இந்த கிரியைகள் உங்களது வாழ்க்கை மூலமாக வெளிப்படுவது அவசியம். ஆபிரகாமை குறித்து படிக்கிறோம்: அவன் கிரியையினால் நீதிமான் என்று எண்ணப்படவில்லை, ஆனால் ஆபிரகாம் **தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது (ரோமர் 4:3).** ஏனெனில் **நீதியின் காரியம் அழுக்கான கந்தையை போலிருக்கிறது (ஏசா 64:6).** ஒரு மனிதனும் தன்னுடைய நீதியின் கிரியைகளினால் நீதிமானாய் மாற முடியாது. **(நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது, நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 5:7-9).** கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் நீதிமானாக்கப்பட்டோம், அதினால் அவர் மேல் விசவாசம் வைப்பது அவசியம். ஏனெனில் நீதிக்காக இருதயத்தில் விசுவாசிக்கவேண்டும். விசிவாசத்தினால் நீதிமானாக மாறவும் கர்த்தராகிய தேவனை பிரியப்படுத்தவும் முடியும்.

**நீங்கள் விசுவாசிக்க வேண்டும்:** என்னுடைய பாவம், அக்கிரமங்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். எனக்காக மரித்தார், எனக்காக அடக்கம்பண்ணப்பட்டார், எனக்காக மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து எழும்பினார். பரத்துக்கு ஏறி சர்வவல்லமையுள்ள பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றினார், மரித்தோரையும், உயிரோடு இருக்கிறவர்களையும் நியாயம் செய்ய மீண்டும் வரப்போகிறார். இதை நான் விசுவாசிக்கிறேன். பரிசுத்த ஆவியையும், பரிசுத்த சபையையும், பரிசுத்தவான்களின் ஐக்கியத்தையும், பாவ மன்னிப்பையும், உயிர்த்தெழுதலையும், நித்திய ஜீவனையும் விசுவாசிக்கிறேன். இவைகளை நீங்கள் விசுவாசிக்க வேண்டும். அப்பொழுது வெளிச்சத்தின் கிரியைகளான நீதியை அணிந்துக் கொள்வீர்கள். அணிந்துக் கொண்டு நீதிமானாய் மாறுவீர்கள். இதுதான் நீதியின் மார்க்கவசம். இது உங்களை சாத்தானுடைய அம்புக்கு விலக்கி பாதுகாக்கும். நீதியின் வஸ்திரத்தை தரித்துக்கொள்கிறவர்கள் மாத்திரமே கர்த்தராகிய தேவனோடு சஞ்சரிக்க தகுதியுள்ளவர்கள். இப்பொழுது நீங்கள் அறிந்திருப்பீர்கள் ஒளியின் கிரியையான நீதியானது எவ்வளவு அதிக அவசியமென்று.

ஒளியின் கிரியை சத்தியமாகும். **இயேசு கூறினார்: வழியும், சத்தியமும், ஜீவனும் நானே (யோவான் 14:6).**

ஒளியான இயேசு கிறிஸ்து உங்களுக்குள் வந்திருக்கிறார் என்றால் உங்களுக்குள் சத்தியம் பிறந்திருக்கிறது. சத்தியம் உங்களில் பிறக்கவில்லை என்றால் பொய் ஆளுகை செய்கிறது. பொய்யின் பிதா சாத்தான். அவன் தன்னுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறான். அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான். சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை. அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் (யோவான் 8:44).

தேவன் விரும்புகிறார். நீங்கள் விடுதலைப் பெற வேண்டும். பொய் பேசும்வரையிலும் நீங்கள் பொய்யின் பிதாவிற்கு அடிமைகளாக இருப்பீர்கள். அதற்குதான் **இயேசு கூறினார்: சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் (யோவான் 8:32).** சத்தியம் என்றால் என்ன? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தான் சத்தியம். அவரை விசுவாசித்து அவர் தந்துள்ள கட்டளைகளையின்படி நடப்பீர்கள் என்றால் ஒளியான இயேசு உங்களோடே இருப்பார். இல்லையென்றால் நீங்கள் அவரை அறிந்துக்கொள்ளவில்லை. அறிவதற்கும், தெரிந்ததற்கும் வித்தியம் உண்டு. டோனட் டிரம்ப் அமெரிக்காவின் ஜனாதிபதி என்று நாம் தெரிந்திருக்கிறோம். ஆனால், தனிப்பட்ட விதத்தில் அவரை நாம் அறிந்தது இல்லை. அப்படியே இயேசுவை தெரிந்திருக்கிறது வேறு, தனிப்பட்ட விதத்தில் அவரை அறிந்திருப்பது வேறு. அநேகர் இயேசுவை தெரிந்திருக்கிறார்கள். ஆனால் அவரை விசுவாசித்து தன்னுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருடைய கட்டளையின்படி நடக்கிறவர்களே இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்கிறார்கள். நீங்கள் இயேசுவை அறிந்திருக்கிறீர்களா? இல்லையென்றால் தெரிந்திருக்கின்றீர்களா? இன்று வரையிலும் நீங்கள் அறியவில்லை என்றால் இதுவே நல்ல சமயம். அவரை அறிந்துக்கொள்வதற்கு. எந்த எதிர்ப்பும் இல்லாமல் அவர் உங்களை நேசிக்கிறார். அவருடைய அன்பில் சுயம் இல்லை, உங்களிடத்திலிருந்து ஏதாவது பெற்றுக்கொள்ள உங்களை நேசிக்கவில்லை. அவருடைய அன்பு பரிசுத்தமானது. அவருடைய அன்பை **‘அகாபே love’** என்று கூறுகிறார்கள். இதற்கு அர்த்தம் எதிர்பார்ப்பற்ற அன்பாகும். இதுதான் சத்தியம்.

இந்த சத்தியத்தை அறிந்த நீங்கள் சாத்தானுடைய பொய், அந்தகாரத்தின் அடிமை தனம், உலக மாமிச இச்சை, மற்றும் சரீர இச்சையிலிருந்து விடுதலை பெறுவீர்கள். சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும். விடுதலைப் பெற்ற பின்பாக ஒளியின் கிரியையாகிய நற்கிரியை, நீதி, சத்தியத்தில் நிலைத்திருந்து அதன்படி நடந்திருங்கள். **நீங்கள் கோணலும், மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடமற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாயிருக்கும்படிக்கு ஜீவவசனத்தை பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களை போல பிரகாசியுங்கள் (பிலி 2:14,15).**

நீங்கள் சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம். (கொலோ 1:10-12). **நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்று இயேசு கூறினார் (யோவான் 8:12).** கர்த்தராகிய தேவன் தாமே நீங்கள் பெற்ற ஒளியை வீசும்படிக்கு உதவிச் செய்வாராக!ஆமென்.

online Banking

Dhaya Ministries and Charitable Trust

State Bank of India
A/c.No.30916103538
Branch - Purasawalkam, Chennai (T.N.)
IFS Code SBIN 0001515

Or

Union Bank of India
A/c.No.527102010312844
Branch - St. Joseph, Bhopal (M.P.)
IFS Code UBIN0558712

Do you have any prayer request? Please contact to us through Email or Phone.
Email: info@dhayaministries.org, Contact No. 9893141410, 9840517559
Visit us : www.dhayaministries.org

You can scan & donate us



## கடந்த இதழின் வேத வினாப்போட்டி - 43 க்கான விடைகள்

1. **சர்தை** - வெளி 3:4.
2. **லவோதிக்கேயா** - வெளி 3:14 & 20.
3. **மாம்சத்தினால் அழிவை** - கலா 6:8.
4. **விசுவாச குடும்பத்தாருக்கு** - கலா 6:10.
5. **பவுல்** - கலா 6:17.
6. **ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து** - கலா 6:2.
7. **ஈசாக்கைப்போல** - கலா 4:28.
8. **அரபிதேசத்திலுள்ள சீனாய் மலை** - கலா 4:25.
9. **சுயாதீனமுள்ளவளுக்கே** - கலா 4:31.
10. **பவுல்** - கலா 1:17.

### வேத வினா போட்டி - 44

**(பதில் வசன எண், அதிகார எண்ணுடன் இருக்க வேண்டும்)**

1. யாருடைய வில்லை உன் இடதுகையிலிருந்து தட்டிவிடுவேன் என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது?
2. யார் தங்கள் எலும்புகள் உலர்ந்து போயிற்று என்கிறார்கள்?
3. யாரிடத்தில் வேத நியாயத்தைப் பற்றிக்கேள் என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது?
4. யாருடைய கால்கள் மலையின் மேல் வருகிறது?
5. நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் யாருக்கேற்ற பலனை அடைவான்?
6. யாருடைய காலமுதல் பரலோக ராஜ்யம் பலவந்தம்பண்ணப்படுகிறது?
7. யார் வழியருகே விதைக்கப்பட்ட விதையை போல இருக்கிறான்?
8. களைகள் யாருடைய புத்திரர்?
9. யார் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போல பிரகாசிப்பார்கள்?
10. யாக்கோபு யோசே சீமோன் யூதா என்பவர்கள் யாருக்கு சகோதரர்கள்?
11. யாருடைய மாமி ஜுரமாய் கிடந்தாள்?
12. நாலுபேர் யாரை சுமந்துக்கொண்டு வந்தார்கள்?
13. நீ எழுந்து பட்டணத்துக்கு போ, நீ செய்யவேண்டியது உனக்குச் சொல்லப்படும் என்று யாரிடம் சொல்லப்பட்டது?
14. யாரினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் சீமோனைத் தேடி வந்தார்கள்?
15. கொர்நேலியுவின் பதவி என்ன? சீமோனின் வேலை என்ன?

### தேவைகள்:

1. ஒரு அருட்பணியாளர்களுடைய மாதாந்திர உதவித்தொகை ரூ **5000/-**
2. ஒரு அருட்பணியாளர்களின் பிள்ளைகளுடைய படிப்பிற்காக ரூ **1000/-**
3. ஒரு பணித்தளங்களில் நிகழ்ச்சி நடத்த தேவைப்படும் தொகை ரூ **2000/-**



# உக்கிராணக்காரன்....



சகோதரி. ஜோஸ்பின் டேனியல்

**வேதப்பகுதி: லூக்கா 16:1-11; I கொரி 4:1-4; ஆதி 39: 1-4; II இரா 5: 19 - 27.**

உக்கிராணக்காரன் என்றால் ஒரு எஜமான் தன்னுடைய காரியங்களை மற்றவரிடத்தில் பொறுப்பாக பார்த்துக் கொள்ள பொறுப்பாக நியமிக்கப்பட்டவர்தான் உக்கிராணக்காரன் என்பதாகும் அநேகர் இந்த உக்கிராணக்காரன் என்ற வார்த்தையை கேட்டவுடன் பணம் என்று நினைத்துக்கொள்கிறார்கள். அப்படியல்ல இந்த உக்கிராணக்காரன் என்ற வார்த்தை எல்லாருக்கும் பொருந்தக்கூடியதாகும்.

நாம் வேதப்பகுதியில் வாசித்தோம்: ஒரு ஐசுவரியவானாகிய மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான்; அவனுடைய எஜமானுக்கு, உக்கிராணக்காரன் எஜமானுடைய ஆஸ்தி எல்லாம் அழித்துப் போடுகிறதாக அறிவிக்கப்பட்டது. அப்பொழுது எஜமான் அவனை வரவழைத்து: உன்னைக்குறித்து நான் கேள்விப்படுகிறதென்ன? உன் உக்கிராணக் கணக்கை யொப்புவி என்றான்.

பிரியமானவர்களே! நமது ஆவிக்குரிய காரியத்தில் உக்கிராணத்திலும் நாம் எங்கு இருக்கிறோம் என்று தெரியனும். நாம் எதற்காக வந்திருக்கிறோம், நாம் எங்கு இருக்கிறோம், எங்கு போகிறோம் என்று தெரிந்தால்தான், எப்படி, எங்கு முடிக்க முடியும் என்றும் தெரியும். இவைகள் தெரியாவிடால் நாம்மால் முடிக்க முடியாது. GoogleMap - ல் நாம் எங்கு இருக்கிறோம் என்றும் எங்கு போக போகிறோம் என்றும் எழுதினால் தான் Map நம்மை வழி நடத்தும்...

இந்த செய்தியின் மூலமாக நாம் எங்கே இருக்கிறோம்? எங்கு போகிறோம்? என்று படிக்கப்போகிறோம். எப்படி போக வேண்டும் என்றும் கற்றுக்கொள்ள போகிறோம்.

நாம் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தின் ***உக்கிராணக்காரன்*** என்று அழைக்க - படுகிறோம்(I கொரி 4:1-4). எல்லாம் தேவனுடைய மகிமைக்காக செயல்படுத்துவது தான் உக்கிராணக்காரனுடைய முக்கியமான காரியமாகும். ***உக்கிராணக்காரன்*** வார்த்தையானது Greek word- ல் இருந்துதான் வந்தது... Manager என்றும் Guardian என்றும் சொல்லலாம். உங்களுக்கு சொந்தம் அல்ல ஆனால் நீங்கள் அதை பராமரிப்பதற்கான பொறுப்பு உண்டு. ஒரு BankManager - ரிடம் கோடிக்கணக்கான பணம் இருக்கும், அவரிடம் சாவியும் இருக்கும், அவர் அதனை தொடவும் முடியும்? ஆனால் அவைகள் அவருக்கு சொந்தம் அல்ல. அது அவருக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு.

நிர்வாகிக்கும் பொறுப்புதான் உக்கிராணக் கணக்கு என்பதாகும். ஆதி 39: 1-4 - ல் வாசிக்கிறோம்: "யோசேப்பு எகிப்துக்குக் கொண்டு போகப்பட்டான். பார்வோனுடைய பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதிமாகிய போத்திபார் என்னும் எகிப்து தேசத்தான் அவ்விடத்திற்கு அவனை கொண்டு வந்த இஸ்மவேலரிடத்தில் விலைக்கு வாங்கினான். கர்த்தர் யோசேப்போடே இருந்தார். அவன் காரியசித்தியுள்ளவனானான். அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டில் இருந்தான். கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும் அவன் எஜமான் கண்டு, அவனிடத்தில் தயவுவைத்து, அவனைத் தனக்கு ஊழிக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ***ஒப்புவித்தான்***".

யோசேப்பினிடத்தில் ஒப்புவித்ததை அவன் நிர்வாகித்தான். ஆனால் அவைகள் அவனுக்கு சொந்தமல்ல. அதனை அனுபவிக்கும் அதிகாரம் அவனுக்கு இல்லை. இதற்கு இன்னும் ஒரு வார்த்தை Guardian என்றும் கூறலாம்.

அநேகர் **steward** என்ற வார்த்தையை கேள்விப்படும் போது அதனை பணத்திற்கு மாத்திரம் என்று நினைக்கிறார்கள். பணம் மாத்திரம் அல்ல. இந்த உலகத்தில் நாம் அனுபவிக்கிற அனைத்துமே நமது கரத்தில் ஒப்புவிக்கப்பட்டதாகும். ஒப்புவித்தவரிடம் நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். இதனுடைய அடிப்படை என்னவென்றால் நாம் பெற்றுக் கொண்டது எல்லாம் தேவனிடத்திலிருந்து தான் பெற்றுக்கொண்டோம். ஆண்டவருக்கு தான் எல்லாம் சொந்தம். நாம் காண்கின்றவைகள், காணாதவைகள் எல்லாம் ஆண்டவருக்கு சொந்தமானது. உங்களையும் சேர்த்து தான் கூறுகிறேன். நீங்கள் ஆண்டவருக்கு சொந்தம் என்றால் உங்களிடத்திலுள்ள அனைத்தும் ஆண்டவருக்கு சொந்தமாகும்.

தேவன் தான் உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் உண்டாக்கினவர், அவரே

வானத்திற்கும், பூமிக்கும் தேவனாய் இருக்கிறார் **(அப் 17:24).** வானங்களும், வானாதி வானங்களும், பூமியும் அதிலுள்ள யாவும், உன் தேவனாகிய கர்த்தருடையவைகள் **(உபா 10:14).** பூமியும், அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது **(சங் 24:1).** பூலோகத்தையும் அதிலுள்ள யாவையும் அவரே அஸ்திப்பாரப் படுத்தினார் **(சங் 89:11).** அவரே எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறார், ஐசுவரியமும் கனமும் தேவனாலேதான் வருகிறது என்றும் தேவன் எல்லாவற்றையும் ஆளுகிறவர், அவருடைய கரத்தில் சத்துவமும் வல்லமையும் உண்டு என்று **I நாளா 29:10-16-ல்** வாசிக்கிறோம்.

நாம் பெற்றுக்கொண்ட குடும்பம், ஐசுவரியம், கனம், வேலை, சுகம், நேரம் இவைகள் எல்லாம் தேவனுக்கு சொந்தமானது ஆகும். அவருக்கு சொந்தமானதிலிருந்து தான் நமக்கு கொடுத்திருக்கிறார்.

உங்களுக்கு கொடுக்கப்பட்டவைகளுக்கு நீங்கள் தான் உத்திரவாதம் தர வேண்டும். மற்றவர்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டவை -களுக்காக உத்திரவாதம் கொடுப்பார்கள். மற்றவர்களுடைய காரியங்களில் நீங்கள் நுழைய வேண்டிய அவசியமல்ல. நீங்கள் அடுத்தவர்களை பார்க்கவே தேவையல்ல.

நீங்கள் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட உங்கள் கணவன்/மனைவி, பிள்ளைகள், பெற்றோர், மற்றும் உங்களுக்குரிய வேலை, சொத்து, நேரம் மற்ற அனைத்துமே தேவன் உங்களிடத்தில் ஒப்புவித்ததாகும்.

அநேக குடும்பத்தில் பிரச்சனைக்கு காரணம் என்னவென்றால் கணவன், மனைவி, பிள்ளைகள், பொருட்கள், சொத்துகள் எல்லாம் எனக்கு தான் என்று நினைத்து அனுபவிக்கும் போது பிரச்சனை உண்டாகிறது. என்னிடத்தில் உள்ள எதுவும் எனக்கு சொந்தம் அல்ல தேவன் அதனை எனக்கு கொடுத்திருக்கிறார் என்ற உணர்வு எப்பொழுதும் உங்களுக்குள் இருக்க வேண்டும். நீங்கள் அதனை எப்படி பயன்படுத்தி, பெருகச்செய்கிறீர்கள் என்று ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். எல்லாவற்றையும் நானே அனுபவிக்க வேண்டும், தலையாக இருந்து ஆளுகை செய்ய வேண்டும் என்று நினைக்கிற குடும்பங்களில் நிச்சயமாகவே சாத்தான் அந்த இடத்தை ஆளுகை செய்து பிரச்சனையை கொண்டு வருகிறான்.

எல்லாம் எனக்குரிது என்று நினைக்கும் போது பிரச்சனை வருகிறது. சில குடும்பங்களில் கணவன் (அ) மனைவி தேவன் எனக்கு கொடுத்த வான்க்கை துணை என்று நினைப்பது கிடையாது. நான் சொல்வது தான் நடக்க வேண்டும், என்னுடைய ஆசை நிறைவேற வேண்டும், என்னுடைய உணர்ச்சியை தான் எல்லாரும் புரிந்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கும் போது வீடுகளில் பிரச்சனை உண்டாகிறது. சிலர் தன்னுடைய ஆசைகளை பிள்ளைகளின் மேல் திணிக்க பார்ப்பார்கள்... அவர்களால் செய்ய முடியுமா? அல்லது என்ன படிக்க முடியும் என்று யோசிப்பது கிடையாது. சில வீடுகளில் திருமணம் முடித்த பிள்ளைகளையும் தன்னுடைய விருப்பத்தில் வாழ வேண்டுமென்று சில பெற்றோர் விரும்புகிறார்கள்.

பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் மீது அன்பு உண்டு, உரிமையும் உண்டு ஆனால் அந்த உரிமையை தேவனிடத்திலிருந்து தான் பெற்றோம் என்பதை உணர்ந்தால் அங்கு தேவனுடைய சித்தம் நிறைவேறவும் அவரிடத்தில் இருந்து பெற்றுக்கொண்டதை அவரிடத்தில் ஒப்புவிக்க வேண்டுமென்ற உணர்வும் காணப்படும்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட வீடாகட்டும், **daimond** பொருட்களாக இருக்கட்டும் எதையுமே இந்த உலகத்திலிருந்து எடுத்துக்கொண்டு போக முடியாது. இவைகள் எவைகளும் உங்களுக்கு சொந்தமானது அல்ல.

இந்த உலகத்தில் நாம் யாருமே ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, கொண்டு போக போவதுமில்லை... இவ்விதமான நிலையில் இருக்கும் போது இன்னும் வேண்டும், இன்னும் எல்லாம் என்னுடையது என்று எப்படி நம்மால் கூற முடியும். ஆகையால் இந்த உலகத்தில் எதையாவது எடுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிற காரியம் எப்படிப்பட்டதாய் இருக்கும்?.

பிரசங்கி **5-** ம் அதிகாரம் **15-**ம் வசனத்தில் வாசிக்கிறோம்...“தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான், வந்தது போலவே நிர்வாணியாய்த் திரும்பப்போவான்; அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக் கொண்டு போவதில்லை”

கணவன், மனைவி, பிள்ளைகள் யாருமே உங்களுக்கு சொந்தம் அல்ல... ஆனால் தேவன் உங்களை நம்பி கொடுத்த இந்த உறவை நீங்கள் எப்படி பராமரித்திருக்கிறீர்கள். கர்த்தர் வீடடைக் கட்டாராகில், அதைக்கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா **(சங்127:1).** தேவன் கொடுத்ததை தேவனே பார்த்துக்கொள்வார் என்று நினைத்து அப்படியே விட்டுவிட தேவன் யாருக்கும் சொல்லவில்லை.

தேவன், ஆதாம் ஏவாளை படைத்து அவர்களை தோட்டத்தின் நடுவில் வைத்து அதனை பண் படுத்தவும், காக்கவும் சொன்னார். பொறுப்புகளை நம்மிடம் ஒப்புவித்திருக்கிறார். ஆதலால் தான் இதற்கு உக்கிராணக்காரன் என்ற வார்த்தை நமக்கு பொருந்துகிறது.

பிள்ளைகளை நீங்கள் நிர்வாகிக்கிற பொறுப்பை கர்த்தர் உங்களுக்கு கொடுத்து இருக்கிறார். இந்த உலகத்தில் எவைகளும் எனக்கு சொந்தம் அல்ல. எனக்குரியது எல்லாம் தேவனுக்குரியது என்று நினைப்பீர்கள் என்றால் அதனை சரியாக நிர்வாகிக்க கற்றுக் கொள்வீர்கள். நீங்கள் வைத்திருக்கிறது மற்றும் உங்களுக்கு கொடுக்கப்பட்டது எல்லாம் தேவன் உங்களுக்கு கொடுத்தவைகள். அவைகள் உங்களுக்கு சொந்தமானது அல்ல. உங்களுக்கு கொடுக்கப்பட்டவைகளில் நல்ல உக்கிராணக் காரனாய் உங்களுடைய வாழ்க்கையை சரியான முறையில் நிர்வாகிக்க நாம் தேவனிடத்திலிருந்து பெலத்தை பெற வேண்டும். **உங்களுடைய பிள்ளைகள், பொருளாதாரம், நேரம், குடும்பம், கணவன், மனைவி உறவுகள் சரியான முறையில் நிர்வாகிக்கும் போதுதான் நீங்கள் சரியான உக்கிராணக்காரனாய் இருப்பீர்கள்.**

எதற்காக உங்களுக்கு எல்லாம் கொடுக்கப்பட்டது? நீங்கள் அதனை பெருகச் செய்யவேண்டும். மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும். தேவனிடத்திலிருந்து நீங்கள் பெற்றதினால் ஏழ்மையானவர்களை அலட்சியம் செய்யக்கூடாது காரணம்... நீங்கள் பெற்றுக்கொண்டதே தேவனிடத்திலிருந்து தான்... மற்றவர்களுக்கு குறைவாக கிடைத்திருக்கும் என்றால் அவர்களை விட நீங்கள் உத்தமர்கள் அல்ல... தேவனுடைய கிருபையே. தேவன் இந்த உலகத்தில் உங்களை அவருக்கு **பிரிதிநிதியாக** வைத்திருக்கிறார்.

**உக்கிராணக்காரனின் மதிப்பு:** பணம் நமக்கு ஒரு அத்தியாவசியமான தேவை... ஆனால் அதற்காக நாம் காரியங்களை செய்ய கூடாது... பண ஆசை எல்லா தீமைக்கும் வேரானது... ஆனால் அதற்காக காரியங்களைச் செய்யக்கூடாது... ஐசுவரியத்தை நம்பும் போது சுயத்தை சார்ந்துக் கொள்வார்கள். தன்னுடைய ஐசுவரியத்தை நம்புகிறவன் விழுவான்: நீதிமான்களோ துளிரைப் போலவே தழைப்பார்கள் (நீதி 11:28).

திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் **நற்கீர்த்தியே** தெரிந்துக் கொள்ளப்படத்தக்கது: பொன் வெள்ளியைப் பார்க்கிலும் **தயையே** நலம் (நீதி 22:1). ஆகையால் எந்த மனிதனுக்கும் பணம் நிலைத்திருக்காது. உங்களுடைய குணம் தான் உங்களோடே கடைசி வரையும் வரும் நீங்கள் மரித்த பின்பும் அதற்குரிய பலனை உங்களுக்கு கொடுக்கும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணத்தை எப்படி பயன்படுத்துகிறீர்கள்? தேவன் பணத்திற்கு கூட உங்களை உக்கிராணக்காரராக வைத்திருக்கிறார். ஆகையால் நீதிமான்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக, நற்கீர்த்தி உள்ளவராய் இருங்கள். இருக்கிறது போதும் என்று எண்ணுங்கள்.

முதலாவது நீங்கள் யாருடையவர்கள் என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். இவைகள் தெரிந்தால் போதும்... நீங்கள் முதலாவது தேவனால் சிருஷிக்கப்பட்டவர்கள். யாரும் இந்த உலகத்தில் பெற்றோரை தெரிந்தெடுத்து பிறப்பது இல்லை.

நீங்கள் தேவனால் **உண்டாக்கப் பட்டவர்கள்** என்று நினைக்க வேண்டும். இரண்டாவதாக என்னை **மீட்டெடுக்கும்படியாக** தேவன் தன்னுடைய ஒரே பேறான குமாரனை எனக்காக இந்த உலகத்தில் அனுப்பினார். **இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நான் மீட்டெக்கப்பட்டதினால் அவருக்கு நான் சொந்தம்** என்கிற உணர்வு வர வேண்டும்.

வீடு, கணவன், பணம், திறமை, நேரம், இவைகள் மாத்திரமல்ல உங்களுக்கு தேவன் **இரட்சிப்பையும்** கொடுத்திருக்கிறார்.

சில சமயங்களில் நாம் யோசிக்கிறோம்: நமக்கு தாலந்து அல்லது பணம் இவைகள் இருந்தால்தான் அதனை குறித்து கணக்கு ஒப்பிவிக்க வேண்டுமென்று... இவைகள் மாத்திரம் அல்ல எல்லாவற்றிக்கும் நாம் கணக்கு கொடுக்க வேண்டும்.

முதலாவது தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கிற வாழ்க்கையில் நீங்கள் உக்கிராணக்காரர். உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள் என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். நேரம், வேலை, குடும்பம், தாலந்து, பணம், சபை, ஊழியங்கள் இவை அனைத்து காரியங்களுக்கும் நீங்கள் உக்கிராணக்காரன். சிலருக்கு அதிகமாகவும் மற்றும் சிலருக்கு குறைவாகவும் கொடுக்கப்

பட்டிருக்கலாம். ஆனால் **எனக்கு ஒன்றுமே கொடுக்கப்படவில்லை என்று யாருமே கூற முடியாது.** குறைவோ அல்லது அதிகமாகவோ கொடுக்கப்பட்டிருக்கும்.

**24** மணி நேரத்தை நீங்கள் எதற்காக, எப்படி செலவிடுகிறீர்கள் என்பதை யோசித்து பார்க்க வேண்டும். இதில் தேனுக்காக கொடுக்கும் அல்லது தேவனுடைய காரியங்களில் ஈடுப்படும் நேரம் எவ்வளவு? தேவன் உங்களுக்காக கொடுத்த **நேரம்** நீங்கள் தான் அதற்கு உக்கிராணக்காரன். யாரோ ஒருவர் உங்களை அழைத்து உங்களிடம் பொறுப்பை ஒப்படைத்தால் தான் உக்கிராணக்காரன் என்பதல்ல. அனைவரும் இந்த உலகத்தில் தங்களுக்கு கொடுக்கப்பட்ட காரியங்களுக்காக கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

உக்கிராணக்காரராய் இருக்கிற நீங்கள் முதலாவது தேவனுக்கு நீங்கள் சொந்தம் என்று அறிய வேண்டும், இரண்டவதாக இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் தேவன் உங்களை மீட்டெடுத்து, உங்களை அவருக்கு சொந்த மாக்கிக்கொண்டார் என்று அறிய வேண்டும் மூன்றாவது நீங்கள் பெற்றுக்கொண்ட மற்றும் அனுபவிக்கிற அனைத்தும் லூக்கா **16:1** - ல் வாசிக்கின்ற வண்ணமாக கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்று அறிய வேண்டும், கடைசியாக உங்களுக்கு கொடுக்கபட்டதை: நான் பெருகச் செய்திருக்கிறேனா? அல்லது ஒரு தாலந்தை பெற்றவன் மண்ணில் புதைத்ததை (மத் 25:15 -30) போல புதைத்து போட்டேனா? என்று உங்களை நீங்களே ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

நீங்கள் சிறந்த உக்கிராணக்காராய் வாழ தேவன் உங்களுக்கு கிருபைச் செய்வாராக!ஆமென்



# குறைவுகளை நிறைவாக்குவார்!



**Mrs. கமலா பால்ராஜ்**

உங்களுக்கு எழுதும்படியாக பரிசுத்த ஆவியானவர் எனக்குக் கொடுத்த வசனம் பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் 4 -ம் அதிகாரம் 19 - ம் வசனம் ***‘என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.’*** கர்த்தர் அருளிச் செய்த மிக மேன்மையான வாக்குத்தத்தங்களில் இதுவும் ஒன்று. பவுல் அப்போஸ்தலன் பிலிப்பி சபைக்கு, கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்கிறேன் (பிலி 4:4) என எழுதுகிறார்.

பிலிப்பியருக்கு தன் மேல் உள்ள அன்பையும் கரிசனையும், உதவும் குணாதிசயத்தையும் பாராட்டிவிட்டு, தன் எல்லா குறைச்சல்களிலும் மன ரம்மியமாக இருக்கக் கற்றுக்கொண்டேன் என எழுதுகிறார். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன் (பிலி 4:13). ஆகிலும் என் உபவதிரத்தில் என்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது. மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்ட போதும் தெசலோனிக்கேயிலிருந்த போதும் என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் எனக்கு உதவி செய்தீர்கள் எனவும் அவர்கள் கணக்குக்குப் பெலன் பெருகவும் வேண்டிக்கொள்ளுகிறேன் என எழுதுகிறார். சகோதரன் எப்பாப்பிரோதீத்துவின் கையில் அவர்கள் அனுப்பிய உதவியை வரப் பெற்று நன்றி கூறுகிறார். இந்த சமயத்தில் தான் அவர்கள் குறைவு பட்ட நேரத்திலும் நம் தேவன் அவர்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையில் நிறைவேற்றுவார் என ஓர் ஆசீர்வாதமாக, வாக்குத்தத்தமாக உற்சாகப்படுத்தி எழுதுகிறார்.

நமது அநுதின வாழ்க்கையிலும் கூட குறைவுகள் அநேகம் வந்து கொண்டே தான் இருக்கிறது. அது போதவில்லை, இது இல்லை, தீர்ந்து விட்டது என்றும், வறுமை, ஏழ்மை, புருஷன் மனைவி சண்டை சச்சரவு, திருப்தியற்ற மனநிலை, உறவுகளில் உபத்திரவம், பொருட்களின் விலைவாசி உயர்வு, மருத்துவ பற்றாக்குறைவு, தண்ணீர் பஞ்சம், வெள்ளத்தினால் வரும் அவதிகள் இப்படி எத்தனையோ அடுக்கிக் கொண்டே போகலாம், இந்தக் குறைவுக்களுக்கெல்லாம் தீர்வு தான் என்ன? மனிதர் சற்று நேரம் அல்லது சிறிது நாட்கள் மட்டுமே உதவுவார்கள் பின்னர் விட்டு மறைந்து செல்வார்கள். ஆனால் எல்லாக்குறைவுகளையும் தீர்க்க வல்லவர் ஒருவர் உள்ளார். அவர் தாம் எல்லாவற்றிலும் சம்பூரணமான தேவன். “நாசியில் சுவாசமுள்ள மனிதரை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் மேல் பற்றுதலாயிருப்பதுதே நலம்” என்று சங்கீதக்காரன்

சொல்லுகிறான். ஆகையால் தேவனையே நாடுவோம், தேடுவோம், கேட்போம், அவர் செவிகொடுத்து பதிலளிக்கிற தேவன். மனிதர் மூலமாகவோ, சூழ்நிலைகளை மாற்றியோ இவ்வுலகிலும் (இம்மை) நம் குறைவுகளை நிறைவாக்குவார். வேதாகமத்தில் எழுதப்பட்டவை யாவும் நமக்கு திருஷ்டாந்தங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன (மாதிரிகளாக) பவுலின் நிருபங்களில் ரோமர் 3:9, I கொரி 10:6,11 - எழுதப்பட்டும் இருக்கிறது. I தீமோத்தேயு 1:16, எபி 4:11, யாக் 5:10, யூதா 7) இவைகளை வாசித்து அறியும் போது, கர்த்தர் பேரில் உள்ள அன்பு பெருகவும், விசுவாசம் வளரவும், உறுதிப்படுத்தவும் உதவுகிறது. உம்மை உறுதியாய் பற்றிக்கொண்டிருக்கிற மனதுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர் (ஏசாயா 26:3).

***சில உதாரணங்களை ஆராய்ந்தறிவோம்:*** முதலாவது இந்த வசனம் எழுதப்படக் காரணமாயிருந்த எப்பாப்பிரோ தீத்துவைக் குறித்து அறியலாம். இவன் பவுலின் கிறிஸதுவுக்குள் சகோதரன், பிலிப்பு சபையிலிருந்து, அந்த சீஷர்களால் பவுலுக்கு உடன் ஊழியக்காரனாகவும், யுத்த வீரனாகவும் பவுலின் தேவைகளைச் சந்திக்க அனுப்பப்பட்டவன். சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்ட ஸ்தானாதிபதி, பிதாவாகிய தேவனால் அனுப்பப்பட்டவர் இயேசு. இயேசுவால் தெரிந்துக்கொள்ளப்பட்டு அனுப்பப்பட்டவர்கள் அவரது 12 அப்போஸ்தலர்கள். இவன் சபையினால் அனுப்பப்பட்ட ஸ்தானதிபதி - சரீர உதவிக்காகவும் (II கொரி 8:23) அனுப்பப்பட்டவன். மிஷனரி என்றும் அழைக்கலாம்!

பிலி 2:25-30 - வாசிக்கவும்: என் குறைச்சலுக்கு உதவி செய்தவன் அவன் வியாதிப்பட்டு மரணத்திற்கு சமீபமாயிந்தான். பவுல் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த வல்லமையினால் அவனை குணப்படுத்தியிருக்கலாம் ஆனால் தனிப்பட்ட அல்லது சுயப்பிரயோஜனத்திற்காக தேவனின் அற்புதங்கள் நடத்தப்படக் கூடாது. அற்புதங்கள் அவிசுவாசிகளுக்காக நடத்தப்படுகிறது (மாற்கு 16:17-20), பவுல் அற்புதம் செய்யாவிட்டாலும், கர்த்தர் எப்பாப்பிரோதீத்துவை மரிக்கவிடவில்லை. தேவன் அவனுக்கு இரங்கினார். அதுமட்டுமல்ல, எனக்கும் துக்கத்துக்கு மேல் துக்கம் உண்டாகாதபடி எனக்கும் இரங்கினார் (பிலி 2:30). ஏனெனில் (பிலிப்பியர்) நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய ஊழியத்தில் உங்கள் குறைவை நிறைவாக்கும்படிக்கு அவன் தன் பிராணனையும் எண்ணாமல் கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்கு சமீபமாயிருந்தான். உங்களுக்கு சமயம் மாத்திரம் நேரிடவில்லை. இல்லாவிடில் உதவியிருப்பீர்கள் என்று கூறி தான் எந்த நிலையிலும் மனரம்மியமாக இருப்பதாக எழுதுகிறார் (பிலி 4:10,11). இவ்விதமாய் பிலிப்பியர் செய்ய வேண்டிய பணிகளை எப்பாபிரோதித்துவை அனுப்பி அவன் மூலம் பவுலின் குறைவுகளை தீர்த்தனர். பிலிப்பியர் செய்ய வாஞ்சித்ததை எப்பாப்பிரோதீத்து நிறைவேற்றினான். ஆகவே அவர்கள் குறைச்சலை தேவன் தம் மகிமையிலே நிறைவேற்றுவார் என வாக்குத்தத்தமாக அளிக்கிறார். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பதே கிறிஸ்துவின் பிரமாணமாகும் (கலா 6:2).

**தேவன் யாருடைய குறைவையெல்லாம் எவ்வாறு தீர்த்தார் என சுருக்கமாகப் பார்ப்போம்:**

1. ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் பிள்ளையில்லாத குறைவை ஈசாக்கைக்கொடுத்து (ஆதி 18-20) நிறைவாக்கினார். 2. மோசேக்கு பதிலாக பேச அவன் சகோதரன் ஆரோனைப் பேசச் சொல்லி குறைவை நிறைவாக்கினார் (யாத் 3). 3. வனாந்திர யாத்திரையில் இஸ்ரவேலரின் அநேக குறைவுகளை கன்மலையின் தண்ணீர், வானத்தின் மன்னா, காடைகள், மேக ஸ்தம் மூலமாக நிறைவாக்கினார் (யாத்). 4. எலியா தீர்க்கதரிசி சூரைச் செடியின் கீழ் படுத்திருந்த போது தேவன் காகத்தினால் போஷித்தார். பின்னர் அவரை விதவையிடம் அனுப்பி, குறைவுகளைத் தீர்த்து வைத்தார் (I இராஜா 19: 1-5). 5. எலிசா தீர்க்கதரிசி மூலம் - தீர்க்கதரிசியின் மனைவி (விதவை) யின் கடனை எண்ணெயை வளர வைத்து குறையைத் தீர்த்தார். நாகமானின் குஷ்டம் நீங்கியது. இன்னும் அநேக காரியங்கள் பழைய ஏற்பாட்டில் உள்ளது.

**புதிய ஏற்பாட்டில்:-** கானா ஊர் கல்யாண வீட்டில் திராட்சை ரசம் குறைவை நிறைவாக்கினார், அநேகரின் நோய் சுகமானது. பிசாசின் பிடியிலிருந்து அநேகர் விடுவிக்கப்பட்டனர், குருடர் கண் பார்வை அடைந்தனர். 5 அப்பம் 2 மீனை ஆசீர்வதித்து ஐயாயிரம் பேருக்கு போஷித்தார். குஷ்டரோகிகள் சுகமடைந்தனர்.

**குறைவு என்று எப்படியெல்லாம் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்று சற்று கவனிப்போம்:-** யோபு எல்லாவற்றையும் இழந்தும் தேவனைப்பற்றிக்குறை சொல்லவில்லை (யோபு 1:22). பிரசங்கியில் ஞானி இம்மாய உலகில் குறைவானதை எண்ணி முடியாது என்கிறார். ஆமொஸ் 4:6 - ல் அப்பக்குறைவை உங்கள் ஸ்தலங்களில் கட்டளையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். சங்கீதக்காரன் 34:10- ல் வாசிக்கிறோம் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது. வெளி.வி 2: 4.22 - ல் இயேசு கிறிஸ்து எபேசு, தியத்தீரா சபைகளுக்கு, உன் பேரில் எனக்குக்குறை உண்டு என எழுதுகிறார். பவுல்.அப்போஸ்தலர் கொலோசெயருக்கு எழுதுகிறார்: ஒருவருக்கொருவர் கிறிஸ்து மன்னித்தது போல மன்னியுங்கள் என எழுதுகிறார்

(4:32). பவுல் கொரிந்து சபைக்கு நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய் (கொலோ 3:13), II கொரி 11:9 - ல் மக்கெதொனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நிறைவாக்கினார்கள் என எழுதுகிறார். இயேசு சீஷர்களை பிரசங்கிக்க அனுப்பிய போது ஒன்றும் குறைவாயிருந்ததில்லை (லூக்கா 22:35). அப்.நட 4:33 - ல் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவுபடவில்லை என்று பார்க்கிறோம். இவ்வாறு சபை வளர்ந்தது. யாதொரு குறையையும் மன்னியுங்கள் என்று இயேசு கூறினார் (மாற்கு 11:25). காணிக்கை செலுத்துமுன் குறைகளிருந்தால் ஒப்புரவாகி பின்னர் கொடுங்கள் என்கிறார் (மத்தேயு 5:23). குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்க, தனக்கு உண்டாயிருக்கும்படி தன் கைகளினால் வேலை செய்யக்கடவன் என பவுல் கூறுகிறார் (எபேசி 4:28). I தெசலோ 3:10 - விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும் பொருட்டு, இரவும் பகலும் மிகவும் வேண்டிக்கொள்ளுகிறோம் என பவுல் கூறுகிறார். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது என யாக்கோபு தன் நிருபத்தில் எழுதுகிறார் (யாக் 1: 4.5). யாக் 1:5 - ல் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் - தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் என பார்க்கிறோம். குறைவுகளை நீக்குவதற்கு ஏதுவாக நற்கிரியைகளைச் செய்யப் பழகட்டும் என தீத்து 3:14 - ல் காண்கிறோம். இவ்வாறு வாழ்க்கை என்னும் பள்ளியில் குறைவுகள் உண்டு, சோதனைகள் உண்டு. கர்த்தர் என்ன கற்றுத்தருகிறாரோ அதற்குக் கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதங்களைத் தருவார். வேதாகம வசனமே நமக்கு வழிகாட்டும் கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது (சங் 119:105).

பிலிப்பியர் 4:6 இன்படி - நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். வசனம் 7- ல் அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். நாம் இழந்ததையெல்லாம் பெற்றுக்கொள்வோம். இயேசு நமக்குக்கொடுக்கும் ஜீவன், அது பரிபூரண ஜீவன் (யோவான் 10:10). நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்து கொண்டு, நம் மனம் புதிதாகும்படி புதிய மனுஷனைத் தரித்துக் கொள்வோம். கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமாயிருக்கிறார். இவையெல்லாவற்றின் மேலும், பூரணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுவோம் தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளுக்கடவது. (கொலோ 3: 5 -16).

அப். பவுலுக்கு பிலிப்பியர் அன்பாகவும் கரிசனையாகவும் செய்த ஊழியம் போற்றப்படத்தக்கது. உண்மையான விசுவாச சபைகள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக தொடர்ந்து உதவி செய்தல் வேண்டும். எந்த இயேசுவின் சீஷனும் தன் வாழ்நாளில் இயேசுவின் (எஜமானின்) மீதியான ஊழியத்தை செய்து முடிக்க ஆவலாயிருக்கிறான். (The Great Commission) அதற்கு உண்டான பலனை தேவன் தந்தருளுவார். கடைசி நாளில் அவனவன் கிரியை அவனுடன் இயேசுவிடம் போகும். இது ஒவ்வொருவர் மீதும் விழுந்த கடமையாகும். தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவான கிறிஸ்துவின் கிருபையிலிருந்து வழுவி விடாமல் நாம் தான் நம்மை தேவனின் மந்தையில் வைத்துக் கொள்ள வேண்டும். சுய சித்தத்துக்கு ஒப்புக் கொடாமல் தேவசித்தத்தை அறிந்து நடக்கும் போது கிருபைக்குள் இருப்போம். தேவ அன்பு நம்மைக் காக்கும். நிற்கிறவன் விழாதபடி எச்சரிக்கையாயிக்கக்கடவோம் (1 கொரி 10: 11 -13). I கொரி 13:10 நிறைவானது வரும் போது குறைவானது நீங்கிப்போகும். பரி.ஆவியானவர் தாமே நம் குறைவுகளை நிறைவாக்குவார். அவர் சமூகத்தில் அமர்ந்து காத்திருக்கும் போது பரி.ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வோம். இந்த கிருபையால் இந்த ஆண்டில் ஒவ்வொருவரும் நிரப்பப்பட ஆசிக்கிறேன்.

முற்றும் தேறிவிட்டேன் என்று நினையாதே. முன்னானவைகளை நோக்கிப்போவோம். உடல், மன சோர்வு ஏற்படும் போது நாம் நம்பியிருக்கும் கன்மலையாகிய கிறிஸ்துவின் வழியே தேவன் இடைபடுவார். பவுலுக்கு சிறைவாசத்தில் ஆறுதலுக்காக எப்பாப்பிரோதீத்துவை அனுப்பி அவர் குறைவுகளை நிறைவாக்கினது போல, கிறிஸ்து நமக்காக பரி. ஆவியான தேற்றரவாளனை அனுப்பி தம் ஐசுவரியத்தின்படியே மகிமையில் உங்கள் குறைவுகளை நிறைவாக்குவார். அவர் என்ன கற்றுத் தருகிறாரோ அதற்குக் கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதமான வாழ்வை இந்த புத்தாண்டில் பெற்று வளமுடன் வாழ்வீர்கள். 3 யோவான் 2 - ன்படி ஆசீர்வாதம் பெறுவீர்கள். ஆகாயத்துப் பறவைகளைப் போல் ஒன்றுக்கும் கவலைப்படாமல், அன்றன்றுள்ள அப்பத்தைத் தாரும் என தேவைகளை ஸ்தோத்திரத்திரத்தோடு கூடிய விண்ணப்பங்களை ஏறெடுத்து இயேசு கிறிஸ்துவின் உலகம் தரக் கூடாத சமாதானத்தைப் பெற்று சுகமாக வாழ்வோமாக!

# பணித்தளச் செய்திகள்...........




## துதியுங்கள்

1. பணித்தளங்களில் தடையின்றி கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி நடத்த தேவன் உதவினார்.
2. அநேகர் உற்சாகமாக கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கலந்துக் கொள்ள தேவன் கிருபை தந்தார்.
3. கடந்த வருடம் பணித்தளங்கள் மற்றும் அருட்பணியாளர்களையும் தேவன் பாதுகாத்துக் கொண்டார்.
4. பணித்தளங்களின் மற்றும் அருட்பணியாளர்களின் தேவைகளை தேவன் கடந்த வருடம் முழுவதும் சந்தித்தார்.
5. ஜெபக்கூட்டங்களில் புதிய நபர்கள் கலந்துக் கொண்டதற்காக.
6. லஷ்மிற்கு சர்ப்பம் கடித்து மயங்கி விழுந்தாள், ஜெபத்தினால் தேவன் சுகத்தை கட்டளையிட்டார்.
7. கோஷி இடுப்பு மற்றும் வயறு வலியினால் பாதிக்கப்பட்டிருந்தாள், தேவன் சுகத்தை தந்ததற்காக.
8. கடைசி மூச்சு துடிப்புடன் இருந்த பகத்சிங்கை தேவன் ஜெபத்தின் மூலமாக உயிர் பெற செய்தார்.
9. சோம்நாத் - நெஞ்சு வலியிலிருந்து சுகம் பெற்றார்.
10. தடையின்றி பத்திரிக்கையை வெளியிட அனைத்து தேவைகளையும் தேவன் சந்தித்தார்.
11. கடந்த வருடம் முழுவதும் எங்களது ஊழிய பிரயாணங்களில் தேவன் தந்த பாதுகாப்பிற்காக.
12. அநேக சபைகளில் உயிர்மீச்சியடைய தேவன் தந்த திறந்த வாசலுக்காக.
13. கர்த்தர் அனைத்து ஜெபங்களைக் கேட்டு அற்பதங்களையும், அடையாளங்களையும் கடந்த ஆண்டு செய்தார்.
14. தயா ஊழியங்களின் அனைத்து தேவைகளையும் தேவன் தமது பண்டகச்சாலையிலிருந்து சந்தித்ததற்காக.
15. தாய ஊழியங்களோடு இணைந்த ஜெபபங்காளர்கள், உதவியாளர்கள், வாசகர்கள், அருட்பணியாளர்கள், விசுவாசிகள் மற்றும் தயா ஊழியங்களை நேசிக்கிற அனைவரையும் தேவன் சுக,பெலன் தந்து, பாதுகாத்து, வழி நடத்தினதற்காக.



## ஜெபியுங்கள்

1. கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் பங்குப்பெற்றவர்களின் வாழ்க்கையில் மாற்றங்கள் வர, அவர்கள் அனைவரும் கர்த்தராகிய இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள.
2. பணித்தளங்களில் சந்திக்கின்ற மக்கள் இயேசுவை அறிந்துக்கொள்ள.
3. இந்த ஆண்டில் பணித்தளங்களில் திருச்சபை கட்டப்பட, அதனுடைய தேவைகளை தேவன் சந்திக்க.
4. அனு - இழுப்பு வியாதியிலிருந்து சுகம் பெற.
5. சிங்காரு பாய் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற.
6. சாதனா, துளசிபாய் - இவர்களுக்கு குழந்தை பிறக்க.
7. கரே காவ்ங் - கிராமங்களில் தண்ணீர் பிரச்சனை இருப்பதினால் போரிங் (அடி பம்பு) அமைக்க.
8. ஞானஸ்நானத்திற்காக 11 நபர்கள் ஆயத்தமாக இருப்பவர்கள் தடையின்றி ஞானஸ்நானம் பெற.
9. மத்திய பிரதேஷ், சத்திஷ்கர்ட் பணித்தளங்களில் நடைப்பெறுகிற அருட்பணியின் மூலமாக அநேக ஆத்துமாக்கள் தேவனை ஏற்றுக்கொள்ள.
10. புதிய பகுதிகளில் அருட்பணியாளர்களை அனுப்பவும், அதனுடைய தேவைகள் சந்திக்கப்பட
11. ஞானஸ்நானம் பெற்றவர்கள் கர்த்தரில் நிலைத்திருக்க ஜெபியுங்கள்.
12. பணித்தளங்களில் விரோதமாக செயல்படுகிறவர்கள் தேவனுடைய அன்பை அறிந்துக் கொள்ள.
13. பஞ்சாய்த்து தலைவர்கள், வார்டு அதிகாரிகளும் சுவிசேஷத்திற்கு உதவியாக இருக்க.
14. அருட்பணியாளர்களை தேவன் தன்னுடைய வல்லமையினாலும், வரங்களினாலும் பயன்படுத்த.

15. வாசகர்கள் ஜெபப்பங்காளர்கள், பொருளாதார உதவியாளர்கள், செயல்குழு அங்கத்தினர்கள், அருட்பணியாளர்கள், மற்றும் ஜெப குழுவில் வருபவர்கள் - இவர்களின் பாதுகாப்பு, சுகம், முன்னேற்றம் மற்றும் தேவைகள் சந்திக்கப்பட.
16. பிரியா, க்ஹாணா, அபிஷேக், திரிஷா, சுலைமான் - திருமணம் நடைப்பெற.
17. சிரில், அபிஷேக் - சாத்தானின் பிடியிலிருந்து விடுதலைப்பெற்று, மன அமைதி பெற.
18. அலுவலக பணிக்கென்று தேவைப்படும் அர்ப்பணிப்புள்ள நபர்களுக்காக.
19. லூர்தன் குடும்பமாய் இரட்சிக்கப்பட.
20. மீட்டாய் - பாதுகாப்பிற்காக, எதிர்காலத்திற்காக, தெளிந்த மனதிற்காக.
21. லஷ்மணன், முகேஷ் - கடனிலிருந்து விடுப்பட
22. சாலமன் - எதிர்காலத்திற்காக.
23. வேலைக்காக காத்திருப்போருக்கு வேலை கிடைக்க.
24. பணித்தளங்களில் மனிதர்களையும், மரித்தவர்களையும், விக்கிரங்களையும் வழிப்படும் மக்களின் கண்கள் திறக்கப்பட மற்றும் இவர்களுடைய இரட்சிப்பிற்காக.
25. குழந்தை திருமணம் அதிகம் நடைப்பெறும் மாநிலங்கள்: ராஜஸ்தான், ஜார்கண்ட், மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம், பீஹார் - இந்த குழந்தைகள் மீட்கப்பட்டு, பாதுகாக்கப்பட.
26. வருகிற மாதங்களில் தயா ஊழியங்களின் மூலமாக நடைப்பெறவிருக்கும் வாலிபர் முகாம்கள்,தலைமைத்துவ பயிற்சிகள், குடும்ப ஆலோசனை கூடுகையின் தேவைகள் சந்திக்கப்பட. அதனை நடத்த தேவன் உதவிச்செய்ய.
27. நமது தேசத்தில் சுமார் 1.25 கோடி குழந்தைத் தொழிலாளர்கள் (தெருவோர கடைகள், சர்க்கஸ், பட்டாசு தொழிற்சாலைகள், உணவகங்கள், வாகனம் பழுது பார்க்கும் இடங்கள், வீட்டு வேலை, கட்டுமான வேலை) - இந்த பிள்ளைகள் விடுதலையாக்கப்பட, இவர்களுடைய முன்னேற்றத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் நமது தேசத்திலுள்ள அதிகாரிகள் உறுதுணையாய் எழும்ப.
28. தேவன் எங்களை பாதுகாத்து, நல்ல சுகம் தந்து, பெலப்படுத்தி வல்லமையாக எடுத்து பயன்படுத்தவும், எங்களுக்கு விரோதமாக எழும்பும் அனைத்து மனித ஆவிகள் மற்றும் சாத்தானின் அந்தகார கிரியைகள் அழிக்கப்பட. ஊழியங்களின் அனைத்து பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட. தேவைகளை சந்திக்க தேவன் தன்னுடைய பிள்ளைகளை எழுப்ப.
29. சந்தி, சல்னா, தில்லி, சனிதா, தினா - இரட்சிப்பிற்காக, சரீரத்தில் நல்ல சுகம் கிடைக்க.
30. ஊழியங்களுக்கு உறுதுணையாக இருக்கும் அனைத்து தேவனுடைய பிள்ளைகளுடைய வீடுகளிலுள்ள குறைவுகள் நிறைவாக.
31. ஊழியங்களின் நிமித்தம் தேவனுடைய நாமம் மகிமையடைய.

**சிறப்பு கூட்டங்கள்:**

பிப்ரவரி **22** -ம் தேதி போதகர் மற்றும் சுவிசேஷ குடும்பத்திற்காக நடைப்பெறவிருக்கும் ஒரு நாள் சிறப்பு நிகழ்ச்சிக்காக ஜெபியுங்கள். வருகின்ற தேவனுடைய ஊழியர்களுக்கு பிரயோஜனமாக இருக்க.

**சிறப்பு ஜெபநாள்:**

**மார்ச் 7 -ம் தேதி நடைப்பெறவிருக்கும் 12 மணி சிறப்பு ஜெபக்கூட்டத்திற்காக ஜெபியுங்கள்.**

**2020 ஊழியங்களின் தேவைகள்:**

1. வட இந்தியாவில் மாவட்டந்தோறும் ஒரு அருட்பணியாளரை அனுப்ப.
2. பல புதிய இலக்கியங்கள் வெளியிடப்பட
3. சந்திக்கப்படாத பகுதிகள் சந்திக்கப்பட
4. பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட
5. ஊழியத்திற்கு தேவையான பொருட்கள் கிடைக்க.
6. ஊழியங்களின் எல்லைகள் விரிவாக்கமடையவும், ஊழியர்களை பயிற்சிவிக்கவும் சொந்த இடம்.
7. அனைத்து மாநிலங்களிலுள்ள திருச்சபைகளுக்குள் திறந்த வாசல் கிடைக்க.

# ஜெபக்குறிப்புகள்

1. தேர்வு எழுதப்போகும் மாணவர்களுக்காக ஜெபியுங்கள்
2. பிரயாணம் செய்பவர்களுடைய பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்.
3. காவல் துறையில் பணிபுரிபவர்களுடைய பாதுகாப்பு, வளர்ச்சி, மனந்திரும்ப ஜெபியுங்கள்.
4. சமூக விழிப்புணர்வு அனைத்து மக்களுக்குள் வர ஜெபியுங்கள்.
5. அதிகாரிகள், அரசியல்வாதிகள் நமது தேசத்தின் மக்களுடைய முன்னேற்றத்திற்கு, பாதுகாப்பிற்கு திட்டமிட்டு செயல்படுத்த ஜெபியுங்கள்.
6. ஊழல் செய்பவர்கள் மனந்திரும்ப ஜெபியுங்கள்.
7. பரவி வரும் கொள்ளை நோய்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.
8. கல்லூரியில் படிக்கும் மாணவர்களுடைய எதிர்காலத்திற்காக ஜெபியுங்கள்.
9. தேசத்தில் வேலை வாய்ப்பு பெருக ஜெபியுங்கள்.
10. வறுமையுள்ளவர்களுக்காக ஜெபியுங்கள்.
11. தேசத்தின் சமாதானத்திற்காக ஜெபியுங்கள்.
12. விஞ்ஞானிகளின் பாதுகாப்பு மற்றும் சுகத்திற்காக ஜெபியுங்கள்.

# தயா ஊழியங்கள்

- ஒரு வார சிறப்புக் கூட்டங்கள்
- சுவிசேஷ கூட்டங்கள்
- எழுப்புதல் கூட்டங்கள்
- வேத பாட ஊழியங்கள்
- சீஷத்துவ ஊழியங்கள்
- ஆசிரியர் சிறப்பு கூட்டங்கள்
- விடுதிக் கூட்டங்கள்
- ஊழியர் புத்துணர்ச்சி ஊழியம்
- உபவாச ஜெபக்கூட்டங்கள்





- சிறுவர் வாலிபர் பெரியோருக்கான சிறப்புக் கூட்டங்கள்
- குடும்பத் தியானக் கூட்டங்கள்
- விடுமுறை வேதாகமப் பள்ளி
- ஞாயிறு பள்ளி ஆசிரியர் பயிற்சி முகாம்
- ஆலய ஆராதனைகள்
- உபவாச கூட்டங்கள்
- முடிவு உங்கள் கையில் - இரண்டாம்வருகை புத்தகம்
- சத்துரு முக்காடிட்டு செல்வான் - மனதில் வரும் போராட்டத்திலிருந்து விடுதலைப்பெற வழி
- தயா ஜோதி - இந்தி பத்திரிக்கை
- இல்லற வாழ்வின் இரகசியம் - குடும்ப ஆலோசனை புத்தகம் (இந்தி, தமிழ் மொழி)
- பாடல் புத்தகம் - இந்தி, ஆங்கிலம்

## Printed Matter

**To.................................................**

**.................................................**

**.................................................**

**.................................................**

**.................................................**


Return Requested to:

**Post Box No.01**

**Dhaya Ministries**

Address : T8/510, Sagar Lake View Homes, Ayodhya Bye Pass Road, Piplani Post, Bhopal (M.P.) - 462022